செ.வெ.எண்:12 நாள்:11.08.2021

# பத்திரிக்கை செய்தி

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள மாற்றுத்திறனாளில் தேசிய அடையாள அட்டை தேவைப்படும் நபர்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. அச்சிறப்பு முகாமின் போது புதியதாக மாற்றுத்திறனாளி அடையாள அட்டை தேவைப்படும் நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது.

அதன்படி மயிலாடுதுறை வட்டாரத்திற்கு 25.08.2021 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், குத்தாலம் வட்டாரத்திற்கு 27.08.2021 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை குத்தாலம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், சீர்காழி வட்டாரத்திற்கு 31.08.2021 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை சீர்காழி வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், கொள்ளிடம் வட்டாரத்திற்கு 02.09.2021 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை கொள்ளிடம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், செம்பனார்கோயில் வட்டாரத்திற்கு 03.09.2021 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது. இச்சிறப்பு முகாம்களில் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் - 4 , ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல் ஆகியவற்றுடன் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.